உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதாந்த பத்திரிகை

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8 NOV 1940 MADRAS

Vol. 2 October 1940. No. 11

விஷய சூசிகை.

	பக்கம்
ரஸாயனம் அல்லது காயகல்பம். (பத்திராதிபர்)	1—16
சித்தர் முறை	17—24
பண்டிட் நாராயணய்யங்கார்	

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—

உள் நாட்டுக்கு ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8

,, ,, ½-க்கு ரூ 4

,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0

குழந்தைகளுடைய ஆரோக்யம் முதலியவை
களுக்கு இன்றியமையாத

பயஸ்யா

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களால் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது.

பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அவசியமானதோர் சிறந்த ரஸாயனம்.

இது தாய்ப்பாலின் அளவையும், ஜீவ சத்துக்களையும், மிகுதியாக விருத்தி செய்வதுடன் குழந்தைகளுக்குப் புஷ்டி, பலம், ஆரோக்கியம் முதலியவைகளையும் பூர்ணமாய் அளிக்கிறது. உபயோகிக்கும் விதம் முதலியவை லேபிளுடன் அனுப்பப்படும். **விலை ரூபாய் 2-4-0** தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

ஆத்ரேய ஆயுர்வேத ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு. திருச்சிராப்பள்ளி.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் **கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 18, இன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு** மருந்துகள் **92, காதுநோய்களுக்கு** மருந்துகள் **6, மூக்குநோய்களுக்கு** மருந்துகள் **6, முகரோக** மருந்துகள் **3, தொண்டை** நோய்களுக்கு மருந்துகள் 6, **உள்வாய்** ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் **153 ஆக இவ்விதம்** மொத்தம் 867 மருந்துகள் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

ரஸாயனம் அல்லது காயகல்பம்.

(பத்திராதிபர்)

50. **ஆமலகரஸாயனம்**—இது அஷ்டாங்க ஹிருதயத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. இந்த முறை பண்டிட் மாளவியா அவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. பலாசமரம் என்ற புரசமரத்தைக் காட்டில் அல்லது நாட்டில் தேடி பொறுக்கி எடுக்க வேண்டும். அது பச்சை மரமாக இருக்கவேண்டும். அம்மரத்தில் குற்றம் ஒன்றும் இருக்கக்கூடாது. நடுத்தர வயதுள்ள மரமாக இருக்கவேண்டும். அந்த மரத்தை அடிமரம் மாத்திரம் நிற்கும்படி வைத்துக்கொண்டு மேல்பாகத்தை வெட்டி விடவேண்டும். சுமார் பூமியிலிருந்து மூன்று அல்லது நான்கு அடி உயரம் வைத்துக் கொண்டு கிளை பிரியும் பாகத்திலிருந்து வெட்டி விடவேண்டும். வெட்டின பிறகு மரத்தின் உச்சியிலிருந்து சுமார் இரண்டு முழம் ஆழத்திற்கு அம்மரத்தின் நடுவில் துளை போடவேண்டும். அநேகமாக நமது நாட்டில் பலாசமரம் சுமார் மூன்றடி சுற்றளவுள்ளதாக கிடைப்பது சுலபம். அம்மரத்தின் நடுவில் குடைந்து இரண்டு முழம் ஆழம் பள்ளம் செய்யவேண்டும். பள்ளத்தைச் சுற்றி வர நான்கு பக்கத்திலும் சுமார் ஆறு அங்குலம் கனமுள்ள பாகத்தை நிறுத்தி விட்டு மீதி பாகத்தைக் குடைந்து எடுக்கவேண்டும். அந்தப்பள்ளம் நிறைய நல்ல பழுத்த நெல்லிக்கனிகளைப் போட வேண்டும். மேல் வாய்க்கு அதே பலாசமரத்தின் பச்சைப்பலகை போட்டு ஆவி வெளியில் போகாவண்ணம் நன்றாகப் பொருந்தும்படி செய்து மூடி விடவேண்டும். பிறகு மரத்தின் அடியிலிருந்து நுனி வரை பச்சை தர்ப்பத்தால் சுற்றவேண்டும். அதற்குமேல் தாமரை யோடையிலுள்ள சேறு அல்லது களி மண்ணால் நான்கு விரல் பிரமாணம் பூசவேண்டும். காற்று வீசாமல் அம்மரத்தின் நான்கு பக்கங்களிலும் தட்டி முதலியவைகளால் மறைத்து விடவேண்டும். பசுஞ்சாணி எருவாட்டிகளை அம்மரத்தையொட்டிச் சுற்றி நான்கு பக்கங்களிலும் நுனி வரை யடுக்கித் தீயிடவேண்டும். புகையில்லாமல் நன்றாக ஜ்வாலை விட்டு எரியும்படி செய்யவேண்டும். அதாவது இத்தீயால் பச்சைமரத்தில் ஒரு புழுக்கம் உண்டாகி அதில் உள்ளிருக்கும் நெல்லிக்கனிகள் வேக

வேண்டும். இதுதான் பதம். பிறகு மூட்டத்தைவிலக்கி விட்டு உள்ளிருக்கும் நெல்லிக்கனிகளை உள்ளிருக்கும் விதை நீக்கி வயிறு நிறைய சாப்பிடவேண்டும். தேன், நெய் இவைகளையும் சேர்த்துக் கொண்டு ஷை கனிகளைச் சாப்பிடவேண்டும். வயிறு நிறைய தேவையான வளவு சாப்பிட்ட பிறகு காய்ச்சின பசும்பாலை வேண்டிய வளவு அனுபானமாகச் சாப்பிடவும். பசி எடுக்கும் பொழுதும் பசும்பாலையே ஆகாரமாகக் கொள்ளவேண்டும். வேறு ஒன்றும் சாப்பிடக்கூடாது. இவ்விதம் ஒரு மாதம் செய்யவேண்டும். அபத்யங்களை இக்காலத்தில் பூர்ணமாக விலக்கவேண்டும். பச்சை நீரை கையால் கூட தொடக்கூடாது. குறிப்பு—இம்முறையைச் செய்வதில் அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். (1) மரத்தில் பூச்சி புழு வெட்டு இல்லா [illegible]ல்ல கெட்டியான மரமாகவும் நடுவயதுள்ளதாகவும் இருக்க [illegible]ம். (2) மரம் இருக்கும் இடத்தில் வேர்களுக்குப் பாதகமில்லாமல் அப்படியே வைத்துக்கொண்டு மேல்பாகத்தை மாத்திரம் வெட்டி விடவேண்டும். (3) மரத்தின் நடுவில் குடையும்பொழுது மரம் பிளந்து போகாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். (4) நெல்லிக்கனி நன்றாகப் பழுத்ததாக இருக்கவேண்டும். (5) நெல்லிக்கனிகளில் அடிபடாமலும் காயம் படாமலும் உள்ளவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். (6) அவை நன்றாக வேகவேண்டும். அதாவது புரசம் ரஸம் பெருகி அதோடு சேர்ந்து பக்வமாக வேண்டும். புரசம் மரத்தில் ஓர் உப்பு இருப்பதால் அந்த உப்பில் நெல்லிக்கனி பக்வமாவதால் ஓர் அபூர்வ சக்தியைப் பெறுகின்றது.

51. **ஆமலக ரஸாயனம்**—இது அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், சரகம், ஆகிய இந்நூல்களில் காணப்படுகின்றது. நெல்லிக்கனி ஆயிரம், திப்பிலி ஆயிரம், இவைகளை ஓர் மண்பானையில் போட்டு நடுவயதுள்ள பலாசமரத்தின் பட்டையைச் சுட்டு சாம்பலாக்கித் தண்ணீரில் கலக்கித் தெளிவு எடுத்து முன் [illegible]க்குகள் மூழ்கும்படி பானையில் விட்டு அந்த நீர் முழு [illegible] பிறகு எடுத்து நிழலில் உலர்த்திப் பொடிசெய்து [illegible] ஒரு ப[illegible] சர்க்கரையும் நான்கு மடங்கு தேன் நெய் இவை

களையும் (சர்க்கரை நீங்கலாக பொடியின் அளவுக்கு நான்கு மடங்கு அளவில் தேன் நெய் இவ்வகைளைச் சேர்த்து எடுத்துக்கொள்ளவும்) சேர்த்துக்கலந்து நெய் பானையில் வைத்து ஆறு மாதம் பூமியில் புதைத்து வைத்துப் பிறகு எடுத்து காலை வேளையில் ஜீர்ணசக்தியை யனுசரித்து உட்கொள்ளவும். இம்மருந்து முழுவதையும் உபயோகித்து விடவேண்டும். நூறு வருஷம் அரோகமாக வாழ்க்கை பெறக்கூடும். குறிப்பு—அஷ்டாங்க ஹிருதயத்தில் கடுக்காயும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. மற்ற நூல்களில் கடுக்காய் காணப்படவில்லை.

52. **ஆமலகாவலேஹம்**—நல்ல பழுத்த நெல்லிக்கனிகளை நிழலில் காயவைத்துப் பொடிசெய்து 256 தோலா எடுத்து 21 நாள் நெல்லிக்காய் ரசத்தால் பாவனை செய்து (இவ்விடத்தில் சரகத்தில் ஆயிரம் நெல்லிக்கனிகளை இடித்து எடுத்த ரஸத்தால் பாவனை செய்ய வேண்டுமென்று கூறப்படுகின்றது) தேன், நெய் இவை வகைக்குச் சின்னப்படி நான்கு, திப்பிலிப்பொடி எட்டில் ஒரு பங்கு, சர்க்கரை நான்கில் ஒரு பங்கு, இவைகளைச் சேர்த்து நெய் பானையில் வைத்து மழை காலத்தில் சாம்பலில் புதைத்து வைத்து மழை காலம் நீங்கின பிறகு எடுத்து உபயோகிக்கவும் முன் குணமுண்டாம். குறிப்பு—நெல்லிக்கனிகள் நமது நாட்டில் ஆவணி, புரட்டாசி, மாதங்களில் கிடைப்பது அருமையாக விருந்தாலும் ஹிமாலயம் முதலிய மலைகளில் கிடைக்கக்கூடும்.

53. **சதுர்தாமலக ரஸாயனம்**—நெல்லிக்காய், கடுக்காய் இவைகளைச் சமமாக எடுத்து புரசம்பட்டை (பச்சைப்பட்டை) யில் சுற்றி முழுவதும் களிமண் ஒரு அங்குல கனத்தில் பூசி பசும்சாணி எருவில் புடபாக ரீதியில் வேகவைத்து எடுத்து உள்ளிருக்கும் விதைகளை நீக்கி 4000 தோலா எடுத்து உரலில் போட்டு நன்றாக இடித்து தயிர், நெய், தேன், எள்ளுப்பொடி, நல்லெண்ணை, சர்க்கரை, இவை வகைக்குத்தோலா 666 சேர்த்துக் கலக்கி ஆகாரம் எதுவுமின்றி உபயோகிக்க வேண்டும். மருந்து பூர்த்தியான பிறகு கஞ்சி அல்லது பால் ஆகாரம் உபயோகிக்க வேண்டும். பிறகு நெய்யுடன் அரிசி சாதம் உபயோகிக்க வேண்டும். பசுநெய்யால் அப்யங்கமும் ய்வ

தான்யப் பொடியால் உடம்பு தேய்த்துக் கொள்ளுதலும் செய்ய வேண்டும். இவ்விதம் மருந்து சாப்பிட்ட காலத்திற்கு இரு மடங்கு காலம் பத்யம் அனுஷ்டிக்க வேண்டும். இம்முறை முன் முறையைக் காட்டிலும் உயர்ந்தது. இம்முறை அஷ்டாங்கஸங்கிரஹத்திலும் சாகத்திலும் காணப்படுகின்றது. குறிப்பு—கனிகள் பச்சையாக இருக்கவேண்டும். புடபாகம் செய்யும் விதம்—பசுஞ்சாணி எருவை அடுக்கி அதன் நடுவில் ஷடி களிமண் கவசமிட்ட மருந்தை சற்றும் காயவைக்காமல் அப்படியே வைத்துத் தீயிட்டு களிமண் சற்று சிவக்கும் பொழுது புடத்தை உடனே கலைத்து மண்ணை நீக்கி உள்ளிருக்கும் மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

54. சதுர்துாமலக ரஸாயனம்—நெல்லிக்காய், தான்றிக் காய், இவைகளைச் சமமாக எடுத்து முன்போல செய்யவும்.

55. சதுர்துாமலக ரஸாயனம்—கடுக்காய், தான்றிக் காய் இவைகளைச் சமமாக எடுத்து முன்போல புடபாகம் செய்து உபயோகிக்கவும்.

56. சதுர்த்துாமலக ரஸாயனம்—நெல்லிக்காய், கடுக் காய், தான்றிக்காய், இவைகளைச் சமமாக எடுத்து முன்போல செய்து உபயோகிக்கவும். குறிப்பு—இந்த 53, 54, 55, 56, முறை களில் மருந்து இடை மொத்தம் தோலா 8000 ஆகின்றது. இந்த மருந்து தீரும் வரையில் வேறு ஆகாரம் கூடாது. அதாவது பசி எடுக்கும் போதெல்லாம் இம்மருந்தையே சாப்பிடவேண்டும். அநேக மாக 40 நாள் முதல் 60 நாள் வரையில் உபயோகிக்க வேண்டியிருக் கலாம், மருந்து முடிந்த பிறகு மறுபத்தியம் இரண்டு மடங்கு நாள் அனுஷ்டிக்கவேண்டும். தயிர் சேர்ந்திருந்தாலும் இம்மருந்து இரண்டு மாதத்திற்குள் கெடுவதில்லை.

57. ச்யவனப்ராசம்—இது அஷ்டாங்க ஹிருதயம், அஷ் டாங்க சங்கிரஹம் சாகம், முதலிய பல நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் சுசுருதத்தில் காணப்படவில்லை. தசமூலம், குருந்தொட்டி, கோரைக்கிழங்கு, ஜீவகம் ரிஷபகம், நெய்தல்கிழங்கு,

உளுந்துக்கொடி, பயிறுகொடி, திப்பிலி, கர்காடகசிருங்கி, மேதா, கீழ்வாய்நெல்லி, ஏலம், ஜீவந்தி, (இதை அடபொதியன் என மலையாளத்தில் அழைப்பார்கள்) அகில், திராக்ஷை, பௌஷ்கரம், (இது காச்மீரதேசத்தில் உண்டாவது கோஷ்டம் போன்றுஇருக்கும். இது கிடைக்காவிட்டால் அதற்குப் பதிலாகக் கோஷ்டத்தை யுபயோகிக்கலாம்) சந்தனம், பூலாங்கிழங்கு, வெள்ளைச்சாரடை, காகோலீ, க்ஷீரகாகோலீ காகநாஸா, சீந்தில்கொடி, நிலப்பூசணிக்கிழங்கு, ஆடாதோடைவேர், ஆகிய இவை வகைக்குத் தோலா நான்கு எடுத்து இடித்து ஜலம் சின்னப்படி 32 சேர்த்து அதோடு 500 நெல்லிக்கனிகளையும் போட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அந்தக் கஷாயத்தைத் தனியாக வைத்துக் கொள்ளவும். வெந்த நெல்லிக்கனிகளை எடுத்து அவைகளின் விதைகளை நீக்கி ஓர் இரும்பு பாத்திரம் அல்லது வெங்கல பாத்திரத்தில் போட்டு நல்லெண்ணை 24 தோலா இடை சேர்த்து வதக்கிப் பிறகு பசுநெய் 24 தோலா சேர்த்து அதில் சர்க்கரை தோலா 200ம் அந்தக் கஷாயத்தையும் விட்டு அடுப்பேற்றி தீயிட்டு பாகு பதம் வரும்பொழுது கீழே யிறக்கி தேன் தோலா 48, மூங்கிலுப்பு தோலா 16, திப்பிலி தோலா 8, கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை வகைக்குத் தோலா 1¼ ஆகிய இவைகளைப் பொடிசெய்து சேர்த்து நன்றாகக் கிளரி பத்திரப்படுத்தவும். இந்த லேகியத்தை உபயோகிக்க காஸம், சுவாஸம், க்ஷயம், ஹிருதயரோகம், மூத்திரரோகங்கள், சுக்லரோகங்கள், தொண்டைக்கம்மல் முதலிய நோய்கள் நீங்கி சரீரம் புஷ்டியாகும். தாதுபுஷ்டி யுண்டாகும். குறிப்பு—கஷாய சரக்குகள் 35 இவைகளை அளவுப்படி எடுத்து இடித்து பானையில் போட்டு அதோடு நெல்லிக்காய்களையும் ஓர் துணியில் கட்டிப்போட்டு கஷாயம் வைக்க வேண்டும். பிறகு நெல்லிக்காய்களை விதை நீக்கி எடுத்து நல்லெண்ணையை விட்டு இலேசாக வதக்கிக் கொள்ளவும். சக்ரதத்தத்திலும் சரகத்திலும் இதன் அளவு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது—முதல் வேளை ஆகாரம் தேவையில்லாமலிருக்கும்படி மருந்தை சாப்பிடவேண்டும். அதாவது ராத்திரி பசி எடுக்கும்படி இருப்பதுதான் மருந்தின் அளவு. தத்காலம் இம்மருந்தை ஒரு தோலா அளவு சாப்பிடுவது வழக்கமாகவிருக்கிறது. இந்த அளவு

சாப்பிடுவதால் அதிக பலனை நாம் காண முடியவில்லை. சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி மிகுந்த பலனை நாம் அநுபவத்தில் அறிய முடியவில்லை. நான்கு தோலாவிலிருந்து எட்டு தோலாவளவு சாப்பிடுவதில் பலன் காணப்படுகின்றது. ஆகவே சக்ரதத்தத்தில் சொல்லியபடி அளவை அதிகப்படுத்தியே உபயோகிக்கவேண்டும். இம்மருந்தைச் சாப்பிட்டு அநுபானமாகப் பால் சாப்பிடவேண்டும். ரஸாயன முறையில் உபயோகிப்பவர்கள் பாலை மாத்திரம் ஆகாரமாகச் சாப்பிட்டு குடீப்ரவேசமும் செய்யவேண்டும். சர்க்கரை அல்லது கல்கண்டு அளவுப்படி எடுத்துப் பாகு வைத்துக்கொள்ளவும். ச்யவனர் என்ற ஓர் மஹர்ஷி இம்மருந்தை உபயோகித்து பலன் பெற்றதால் இந்த லேகியத்திற்கும் ச்யவனப்ராசம் எனப்பெயர் பிரசித்தமாயிற்று. ப்ராசம் என்ற பதத்திற்கு சாப்பாடு என்பது பொருள். சரகத்திற்கும் அஷ்டாங்க ஹிருதயத்திற்கும் சரக்குகளில் கொஞ்சம் வித்தியாசம் காணப்படுகின்றது. அஷ்டாங்க ஹிருதயத்தில் "க்ஷீரகாகோலீ" என்ற சரக்கு காணப்படுகின்றது. சரகத்தில் இது காணப்படவில்லை. சரகத்தில் 'அபயா' என்ற சரக்கும் "ரித்தி" என்ற சரக்கும் ஆக இரண்டு அதிகம் காணப்படுகின்றன. இந்த இரண்டு சரக்குகளும் அஷ்டாங்க ஹிருதயத்தில் காணப்படவில்லை. ஆகவே அஷ்டாங்க ஹிருதயத்தில் "காகநாஸா" மிருகாஹ்வயா:" என்ற பாடம் ஒரு சமயம் அச்சுப் பிழையாக இருக்கலாம். "காகநாஸா மிருகாபயா:" என்று இருந்தால் சரகமும் அஷ்டாங்க ஹிருதயமும் ஒத்துப்போகும். சரகத்தில் சொல்லப்பட்ட "ரித்தி" என்ற பதத்திற்கு "க்ஷீரகாகோலீ" எனப்பொருள் கொண்டால் அதுவும் பொருத்தமாகி விடும். இவ்விரண்டு நூல்களுக்கும் உண்மையில் பாடபேதம் இருந்தால் உரையாசிரியர்கள் அதை எடுத்துக் காட்டியிருப்பார்கள். ஒரு உரையாசிரியரும் இந்த பேதங்களை விவரிக்காமலிருப்பதால் இதை அச்சுப் பிழையென்றே கருதவேண்டும்.

நிலப்பூசணிக்கிழங்கு ரஸம் சின்னப்படி ஒன்று, பசும்பால் சின்னப்படி எட்டு, பசுநெய் சின்னப்படி ஒன்று, இவைகளைச் சேர்த்து அதில் திப்பிலி, அதிமதுரம், இலுப்பை, காகோலீ, பூனைக்காலி விதை, ஜீவகம், ரிஷபகம், பால் நிலப்பூசணிக்கிழங்கு, ஆகிய இவை வகைக்குத்தோலா $1\frac{3}{4}$ இடித்துப் பொடிசெய்து கல்கமாகப் போட்டு கிருதபக்குமாகக் காய்ச்சி வடிகட்டி பத்திரப்படுத்தவும். பிரதிதினம் காலை வேளையில் ஜீர்ணசக்தியை யனுசரித்துச் சாப்பிடவும். இவ்விதம் சின்னப்படி 32 படி நெய் முழுவதும் உபயோகிக்கவும். கிருதம் ஜீர்ணமான பிறகு பால், நெய், இவைகளுடன் அரிசி சாதமும் உஷ்ண ஜலமும் உபயோகிக்கவும். பூர்ண ஆயுளை அடைவான். குறிப்பு—இது சரகத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. கடுக்காய் முதலிய 28 சாமான்களையும் வகைக்குத்தோலா $1\frac{1}{4}$ எடுத்து இடித்து சின்னப்படி நான்கு ஜலம் விட்டு கால் படியாக வற்றவைத்துக்கொள்ளவும்.

59. **ஆமலகாயோரஸாயனம்**-நெல்லிக்கனிகளை இடித்து 100 தோலா ரஸம் எடுத்து அதில் பாவனைசெய்த நெல்லிக்காய்ப்பொடி, தேன், சர்க்கரை, வகைக்குத்தோலா 100 இவைகளையும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மஞ்சள், ஓரிலை, குருக்கொட்டி, வாய்விளங்கம், சிந்திற்கொடி, சுக்கு, அதிமதுரம், திப்பிலி, கருங்காலி, இவைகளால் காய்ச்சப்பட்ட கிருதம் தோலா 100-யும் சேர்த்து அதில் சுத்திசெய்த இரும்புப்பொடி தோலா 100 சேர்த்து நன்றாகக் கலந்து பத்திரப்படுத்தி காலையில் ஒரு தோலா யிடை சாப்பிட்டு சாயங்காலத்தில் பாசிப்பயறு கஞ்சி அல்லது பாலுடன் அரிசி சாதத்தை நெய்யுடன் சாப்பிடவும். இவ்விதம் மூன்று வருஷம் உபயோகிக்க முன் குணமுண்டாம். குறிப்பு—இது சரகத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

60. **ஆமலககிருதம்**-இது சரகத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. நல்ல பூமியில் முளைத்து வளர்ந்த நெல்லிமரங்களில்காலத்தில் பழுத்த நெல்லிக்கனிகளை இடித்து எடுத்தரஸம் சின்னப்படி 8 ஜலம் சின்னப்படி 32, பசுநெய் சின்னப்படி 8, இவைகளைச் சேர்த்து அதில் வெள்ளைச்சாரணத்திவேர் தோலா 128 இடித்துப் பொடி

செய்து கல்கமாகப் போட்டுச்சிறுதீயிட்டு கிருதபதமாக வடிக்கவும். பிறகு அந்த வடித்த் நெய்யையும், நிலப்பூசணிக்கிழங்கு ரஸம் சின்னப்படி 1, சுத்தஜலம் படி 32 இவைகளையும் சேர்த்து அடபொதியன்கிழங்கு தோலா 128 இடித்துப் பொடிசெய்து போட்டு கிருதபதமாகக் காய்ச்சி வடிக்கவும். பிறகு அந்த நெய்யில் பசும்பால் சின்னப்படி 32, குருந்தொட்டி, பெருங்குருந்தொட்டி, இவைகளின் கஷாயம் சின்னப்படி 1 இவைகளைச் சேர்த்து தண்ணீர்விட்டான் கிழங்கு தோலா 128 அரைத்துக்கல்கமாகப் போட்டு கிருதபதமாகக் காய்ச்சவும். வடிகட்டி அந்த நெய்யை முன்சொன்ன கிரமப்படி நெல்லிக்காய் ரஸம் முதலியவைகளைச் சேர்த்துக் காய்ச்சவும். இவ்விதம் இதே கிரமத்தில் நூறு தடவை அல்லது ஆயிரம் தடவை காய்ச்சி வடிகட்டி அந்த நெய்யில் நான்கில் ஒரு பாகம் தேனையும் சர்க்கரையும் சேர்த்து நெய் வைத்துப் பழகின மண்பாண்டத்தில் பத்திரப்படுத்தி முன்சொன்ன பத்தியத்துடன் காலையில் ஜீர்ண சக்தியை அனுசரித்து தகுந்த அளவுடன் சாப்பிட்டுகிருதம்ஜீர்ணமான பிறகு பால், நெய் இவைகளுடன் அரிசிசாதம் சாப்பிடவும். மூன்று வருஷம் இவ்விதம் அனுஷ்டிக்க நூறு வயது பூர்ணமாக ஜீவிப்பதுடன் சகல பிணிகளும் விலகும். குறிப்பு—இந்த ஆமலக கிருதம் சதபாகம் என்றும் ஸஹஸ்ரபாகம் என்றும் இருவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது. நூறு தடவை காய்ச்சி எடுப்பது சதபாகம். ஆயிரம் தடவை காய்ச்சி எடுப்பது ஸஹஸ்ரபாகம். அதாவது சொல்லப்பட்ட சரக்குகளைச் சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி வடிகட்டி. பிறகு அந்த நெய்யையே மருந்து சரக்குகள் சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி வடிகட்ட வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு தடவையும் பதமாகக் காய்ச்சி வடிகட்டி திப்பிகளை விலக்கி விட்டு நெய்யை மாத்திரம் எடுத்துக் கொண்டு மறுபடியும் சரக்குகளைப் போட்டுக் காய்ச்சவேண்டும். இவ்விதம் நூறு தடவை அல்லது ஆயிரம் தடவை காய்ச்சவேண்டும். இந்த ஆமலககிருதத்தில் மூன்று பாகங்கள் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது நெல்லிக்காய் ரசமும் வெள்ளைச்சாரணத்தி கல்கமும் சேருவது முதல் பாகம். நிலப்பூசணிக்கிழங்கு ரஸமும் அடபொதியன் கல்கமும் சேருவது இரண்டாவது பாகம். பாலும் குருந்தொட்டி

கள் கஷாயமும் சதாவரி கல்கமும் சேருவது மூன்றாவது பாகம். இதே வரிசையில் பாகம் செய்யவேண்டும். ஒவ்வொரு பாகமும் நூறு தடவை செய்யவேண்டும். அதாவது சதபாகத்தில் முன்னூறு தடவையும், ஸஹஸ்ரபாகத்தில் மூவாயிரம் தடவையும் பாகம் செய்யவேண்டும். இவ்விதம் முன்னூறு அல்லது மூவாயிரம் தடவை பாகம் செய்தால் கிருதம் பல வழிகளில் சுருங்கிவிடும். கடைசித்தடவையில் கிருதத்தைக் காய்ச்சும்பொழுதுகிருதம்போட்ட அளவுக்கு மிகவும்சுவல்பமாகத்தான் கிடைக்கும் என்று உரையில் எழுதியுள்ளார்கள். இந்த ஊகம் தப்பிதம். ஏனெனில் நான்கு பங்கு பால் சேர்த்து ஓர் பாகம் வருவதால்ஏற்கனவேகல்கங்களில் நஷ்டமாகும்கிருதம் ஈடு செய்யப்பட்டுவிடுகின்றது. பூராவளவும் ஈடு செய்யப் படாவிட்டாலும் கிட்டத்தட்ட பூர்த்தி செய்யப்படுவதை அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். குருந்தொட்டி என்பது இருவகை. வெளுத்த புஷ்பமுள்ள குருந்தொட்டி ஓர் வகை. மஞ்சள் புஷ்பமுள்ள குருந்தொட்டி இரண்டாவது வகை. இந்த கிருதத்தை தங்கம் அல்லது வெள்ளிப்பாத்திரத்தில் பத்திரப்படுத்தினால் குணம் மிகுந்து இருக்கும்.

61. **ஆமலகாயஸ பிரஹ்ம ரஸாயனம்**—சந்தனம், அகரு, தவம், தினிசம், கருங்காலி, சிம்சபா, வேங்கை, இவைகளின் உள் வைரபாகங்கள், கடுக்காய், தான்றிக்காய், திப்பிலி, வசம்பு, செவ்வியம், கொடுவேலி, வாய்விளங்கம், ஜீவனீயங்கள் அவைகளாவன—ஜீவகம், ரிஷபகம், மேதா, மஹாமேதா, காகோலி, க்ஷீரகாகோலி அடபொதியன்கிழங்கு, அதிமதுரம், காட்டு உளுந்துகொடி, காட்டு பயறுகொடி, (இந்த பத்து சரக்குகளுக்கும் ஜீவனீயங்களெனப் பெயர்.) பிரும்ஹணீயங்கள். அவைகளாவன—க்ஷீரலதா, துக்திகா குருந்தொட்டி, காகோலி, க்ஷீரகாகோலி, வெள்ளைப்பூ குருந்தொட்டி, மஞ்சள்பூ குருந்தொட்டி, காட்டுப்பருத்தி, நிலப்பூசணிக்கிழங்கு, ரிஷ்யகந்தா, (ஆக இந்த பத்து சரக்குகளுக்கும் பிரும்ஹணீயங்கள் எனப்பெயர்) ஸ்தன்ய ஜனனங்கள். அவைகளாவன—விலாமிச்ச வேர், சம்பா, அறுபது நாள் சம்பா, கரும்புவேர், தர்ப்பவேர், குசம், நாணல், பேய்க்கரும்புவேர், இத்கடம், கந்தப்புல் (இந்த பத்து

சரக்குகளுக்கு ஸ்தன்ய ஜனனங்கள் அதாவது தாய்ப்பாலை விருத்தி செய்பவை எனப்பெயர்) வயஸ்தாபனங்கள். அவைகளாவன—சீந்திற்கொடி, கடுக்காய், நெல்லிக்காய், அரத்தை, வெள்ளைக்காக்கணட்டான், அட்டபதியன்கிழங்கு, அதிரஸா, வல்லாரை, சித்தாமல்லி, வெள்ளைச்சாரணத்தி (ஆகஇந்த பத்து சரக்குகளுக்கும் வயஸ்தாபனங்கள் அதாவது வயதைக் குறைத்துக் காட்டுபவை எனப்பெயர்) இவைகளைச்சமயிடையாக எடுத்து நன்றாக இடித்து பத்து மடங்கு ஜலத்தில் போட்டு பத்தில் ஒன்றாக வற்றவைத்துக் கஷாயஞ்செய்து வடிகட்டி கஷாய சாமான்களின் மொத்த எடையளவு நெல்லிவற்றலை இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை நெல்லிக்காய் ரஸத்தால் 21 தடவை பாவனைசெய்து உலர்த்தி பிறகு அதில் அந்த கஷாயத்தை விட்டு அடுப்பேற்றி பசும்சாணி எருக்களால் அல்லது மூங்கில் விறகால் சிறுதீயிட்டு எரித்து அந்த கஷாயம் சுண்டினவுடன் அதை எடுத்து இரும்புத் தகட்டில் பரப்பி நிழலில் உலர்த்தி நன்றாக உலர்ந்த பிறகு மான்தோல் மேல் கல்வத்தை வைத்து அதில் பொடிசெய்து இரும்பு பாத்திரத்தில் பத்திரப்படுத்திப்பிறகு தினம் காலையில் ஜீரண சக்தியை யனுசரித்து அந்தச் சூர்ணத்தை எட்டில் ஒரு பங்கு அரப்பொடி சேர்த்து தேன், நெய், இவைகளில் குழைத்துச் சாப்பிடவும். இம்முறையை பல பெரியோர்கள் அனுஷ்டித்து நல்ல பலன் பெற்றனர். இம்முறை சரகத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

62. **கேவலாமலக ரஸாயனம்**—ஒரு வருஷ காலம் பசும்பால் மாத்திரம் ஆகாரமாகச் சாப்பிட்டு பசுக்கள் நடுவிலே வசித்து வருஷ முடிவில் மூன்று நாள் உபவாஸமிருந்து தை, மாசி, அல்லது பங்குனி மாதத்தின் பௌர்ணமியில் நெல்லிமரக் காட்டில் நுழைந்து பருத்த கனிகளுள்ள ஓர் மரத்தில் ஏறி கிளைகளில் உண்டாகிப் பழுத்த பழங்களைக் கையால் பறித்து பிரணவத்தை ஜபித்துப்பிறகு வயிறு நிறைய புசிக்கவேண்டும். ரஸாயன பலன் கிடைக்கும். இம்முறை சரகத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

63. **லோகரஸாயனம்**—இது சரகத்திலும் அஷ்டாங்கஹ்ருதயத்திலும் காணப்படுகின்றது. இரும்பை நான்கு அங்குல

நீளமும் எள் கனமுமுள்ள தகடுகள் தட்டி அவைகளைத் தணலில் காய்ச்சி முதலில் திரிபலை கஷாயத்திலும், பசு மூத்திரத்திலும், வாலுளுவைஉப்புத்தண்ணீரிலும்,இங்குதீ உப்புத்தண்ணீரிலும்,பிறகு முருங்கை உப்புத்தண்ணீரிலும், தோய்த்து (அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் நெல்லிக்காய் ரஸத்தில் 21 தடவை காய்ச்சித் தோய்க்கவேண்டுமென்று மாத்திரம் காணப்படுகின்றது) பிறகு அவைகளை இடித்துப் பொடிசெய்து அவசியமானால் அரத்தைக்கொண்டு சிறு பொடியாகச் செய்து 400 தோலா பொடியை ஓர் இரும்பு குடத்தில் போட்டு அப்பொடி முழுகும்படி நெல்லிக்காய் ரசத்தை விட்டு மூடிசாம்பலில் புதைத்துப் பிறகு மாதா மாதம் மூடியைத் திறந்து இரும்பு கரண்டியால் நன்றாகக் கிளரிவிட்டு மறுபடியும் வாய் மூடி புதைத்து வருஷ முடிவில் திறந்து பார்க்க இரும்பு முழுவதும் கரைந்து காணும். பிறகு வமனவிரேசனங்கள் செய்து கொள்ளாமலேயேஸ்நேஹபானம் மாத்திரம் செய்து சரீரத்தை ஸ்நிக்தமாகச் செய்து கொண்டு உள் அகலம், உள் நீளம், உள் உயரம் இவைகளில் கட்டை விரல் கணு அளவுள்ள ஓர் இரும்பு ஸ்பூன் தயார் செய்து ஒரு ஸ்பூன் மருந்தும் தேன், நெய் இவை வகைக்கு ஒரு ஸ்பூனும் எடுத்துக் கலந்து பிரதி தினம் காலையில் சாப்பிட்டு மருந்து ஜீர்ணமான பிறகு பால், கஞ்சி இவைகளில் ஒன்றோடு புதிய அரிசி சாதத்தை நெய் கலந்து சாப்பிடவும். இவ்விதம் ஒரு வருஷம்மருந்து சாப்பிட்டுப்பிறகு ஒரு வருஷம் மருந்தின்றி முன்சொன்ன பத்தியம் மாத்திரம் (மறு பத்தியம்) அனுஷ்டிக்க ரஸாயன குணங்கள் உண்டாகும்.

64. **தார்யரஸாயனம்**—இது அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. சுவர்ணமாக்ஷிகத்தைச் சிந்தூரம் செய்து முன்சொன்னபடி செய்ய முன் குணமுண்டாம்.

65. **ரூப்யரஸாயனம்**—இது சரகத்திலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றது. வெள்ளியைத் தகடு தட்டி முன்போல செய்ய அதிக குணமுண்டாம்.

66 **ஸுவர்ணரஸாயனம்**-இது சரகத்திலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றது. ஸுவர்ணத் [illegible] போல செய்து உபயோகிக்க மிகுந்த குணமுண் [illegible]

67. **ஐந்திரீரஸாயனம்** இம்முறை சரகம், அஷ்டாங்கஹ்ருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம் ஆகிய இந்நூல்களில் காணப்படுகின்றது. இதில் மொத்தம் சரக்குகள் பதினொன்று. அவையாவன—ஐந்திரீ, மத்ஸ்யாக்ஷகம், பிராஹ்மீ, வசா, பிரம்மஸுவர்ச்சலா, பிப்பலீ, லவணம், சங்கபுஷ்பீ, சுவர்ணம், விஷம், கிருதம், இவைகளுக்குத் தமிழ்ப் பெயர்களாவன—பேய்க்கொம்மட்டி, பொன்னாங்காணி, பிரம்மி, வசம்பு, பிரம்மஸுவர்ச்சலா, திப்பிலி, இந்துப்பு, வெள்ளைக் காக்கணட்டான், தங்கரேக்கு, வத்ஸநாபிக்கிழங்கு, பசுநெய். இவற்றில் பேய்க்கொம்மட்டியின் வேரை எடுத்துக்கொள்ள வேண்டும். பிரம்மஸுவர்ச்சலா என்பது ஸூர்யஸுவர்சலா என்பதின் ஓர்பேதமெனத் தெரிகிறது. ஸூர்யஸுவர்சலா என்பது சூரியகாந்தச்செடி. அச்செடியின் புஷ்பம் சூரியன் இருக்கும் திக்கைநோக்கியிருக்குமாதலால் அதற்கு சூர்யபக்தா என்றும் பெயர் உண்டு. வெள்ளைக்காக்கணட்டான் கொடியில் வேரை எடுத்துக்கொள்ளவேண்டும். தங்கத்தை பஸ்மசிந்தூரம் செய்யாமல் அப்படியே சேர்க்கவேண்டும். பேய்க்கொம்மட்டி முதலான எட்டு சரக்குகள் வகைக்கு மூன்றுயவம் இடை எடுத்துக்கொள்ள வேண்டும். தங்கரேக்கு இரண்டுயவம், பசுநெய் தோலா 4, நாபிக்கிழங்கு ஒரு திலம் இடை, எடுத்துக்கொள்ள வேண்டும். யவம் என்பது மாஷம் என்ற அளவில் நான்கில் ஒரு பாகம். அதாவது மாஷம் $\frac{1}{16}$ தோலா அல்லது $11\frac{1}{4}$ கிரெயின்சு இடையுள்ளது. ஆகவே யவம் என்பது சுமார் மூன்று கிரெயின்சு இடையுள்ளதாகும். முன் சொல்லிய எட்டு சரக்குகளும் வகைக்கு 9 கிரெயின்சும் தங்கரேக்கு 6 கிரெயின்சும் நாபிக்கிழங்கு ஓர் எள்ளுப் பிரமாணமும் எடுத்து நன்றாக அரைத்து நான்கு தோலா பசுநெய்யில் கலக்கி காலையில் சாப்பிடவேண்டும். இவ்விதம் பிரதிதினம் புதிது புதிதாகத் தயார் செய்து சாப்பிடவும். மருந்து ஜீர்ணமான பிறகு பசுநெய் மிகுந்த அரிசி சாதம் தேனுடன் பத்தியம் சாப்பிடவேண்டும். இது ரஸாயன குணங்களைக் கொடுப்பதுடன் குஷ்டம், வெண்குஷ்டம், வாதநோய்கள், முதலியவற்றையும் விலக்கும். மூளையைப்பற்றின வியாதிகள் தீரும். புத்தி சக்தியை அதிகப்படுத்தும். இம்முறை [illegible]ருதயத்திலும் இவ்விதமே வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. [illegible]யோகிப்பதில் காலவளவு ஒரு வருஷமென அஷ்

டாங்கஹிருதயம் கூறுகின்றது. இம்முறையில் சேரும் சுவர்ணத்தை அப்படியே ரேக்காக சேர்க்கவேண்டுமா அல்லது பஸ்மம் சிந்தூரம் செய்து சேர்க்கவேண்டுமா என்பது ஓர் பிரச்னை. பஸ்மம் அல்லது சிந்தூரம் செய்தே சேர்க்கவேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். அது சாஸ்திர விருத்தம். சுவர்ணத்தைப் பச்சையாக சேர்த்துப் பல ரஸாயன முறைகள் அஷ்டாங்க ஹிருதயத்தில் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஐந்திரீ ரஸாயனத்திற்குமுந்தின ''யந்நாலகந்த'' என்ற சுலோகத்தில் சொல்லப்படும் சதுஃகுவலயம் என்ற ரஸாயனத்தில் ''ஸஹிரண்யபத்ரம்'' என்று சுவர்ணரேக்கை அப்படியே சேர்த்துச் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குமுந்தின பஞ்சாரவிந்தம் என்ற ரஸாயனத்திலும் ''ஸஹேமசகலம்'' என்று தங்கரேக்கை அப்படியே சேர்க்கும்படி வியக்தமாகக் காணப்படுகின்றது. ஆகவே அதுபோல இவ்விடத்திலும் ரேக்கை உபயோகிப்பதுதான் பொருத்தமாக ஆகும். பச்சையாகச் சேர்ப்பதை விட பஸ்ம சிந்தூரம் செய்து சேர்ப்பது நல்லதுதானே என்ற கேள்வி மிகவும் அசம்பாவிதம் ''ரிஷயஸ்த்வேவ ஜாநந்தி யோகஸம்யோகஜம் பலம்.'' இதன் பொருள்—இரண்டு அல்லது அதிகமான சரக்குகளைச் சேர்ப்பதால் உண்டாகும் குணங்கள் முனிகளுக்குத்தான் புலப்படும். நம் போன்றவர்களுக்கு அது புலப்படாது. ஆகையால் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வழியைப் பின்பற்றி நடப்பது குற்றமற்றதாகும். இது போன்ற விஷயங்களில் நமது யுக்தி பயன்படாது என்பதே. ஆகவே ஐந்திரீ ரஸாயனத்தில் தங்கரேக்குகளை அப்படியே சேர்த்து தினந்தோறும் புதிதாகத் தயார் செய்து உபயோகிப்பது சாஸ்திர சம்மதம்.

68. திரிபலா ரஸாயனம்—இது அஷ்டாங்க ஸங்கிரஹம் சரகம் இவைகளில் காணப்படுகின்றது. பிரதிதினம் காலையில் ஒரு முழு கடுக்காயைத் தேன், நெய், இவைகளுடனும், சாப்பாட்டிற்கு முந்தி இரண்டு முழுத்தான்றிக்காய்களை தேன் நெய் இவைகளுடனும், சாப்பாட்டிற்குப் பிறகு நான்கு நெல்லிக்கனிகளைத் தேன், நெய் இவைகளுடனும் சேர்த்துச் சாப்பிட்டு இவ்விதம் ஒரு வருஷம் அநுஷ்டிக்க ரஸாயன குணமுண்டாம்.

69. திரிபலா ரஸாயனம்—திரிபலையைச் சமமாக எடுத்து அரைத்து (அவசியமானால் ஜலம் விட்டு) ஓர் இரும்புத் தகட்டில் காலையில் அடைபோல தட்டி வைத்து மறுநாள் காலையில் தேன், தண்ணீர், இவைகளில் கலக்கி ஜீர்ண சக்தியை யனுசரித்துச் சாப்பிட்டு ஜீர்ணமானவுடன் நெய் மிகுந்த ஆகாரம் கொள்ள ரஸாயன குணம் கிடைக்கும். இவ்விதம் ஒரு வருஷம் அநுஷ்டிக்க பூர்ணாயுள் வாழலாம். இம்முறை சரகம் அஷ்டாங்க ஸங்கிரஹம் ஆகிய இந்நூல்களில் காணப்படுகின்றது.

70. திரிபலா ரஸாயனம்—திரிபலை, அதிமதுரம், இவைகளைச் சமவிடையாகப் பொடிசெய்து ஒரு வருஷம் சாப்பிட ரஸாயன குணமுண்டாம்.

71. திரிபலா ரஸாயனம்—திரிபலையும் மூங்கிலுப்பும் சமவிடையாகப் பொடிசெய்து முன் போல உபயோகிக்கவும்.

72. திரிபலா ரஸாயனம்—திப்பிலியும் திரிபலையும் சமவிடை கூட்டி முன்போல உபயோகிக்க முன் குணமுண்டாம்.

73. திரிபலா ரஸாயனம்—திரிபலை சமவிடை பொடி செய்து அந்தப்பொடியின் இடைக்கு தேன், நெய் இவைகளைச் சேர்த்துச் சமமாக எடுத்து முன்போல உபயோகிக்க முன் குணமுண்டாம்.

74. திரிபலா ரஸாயனம்—திரிபலையும் சர்க்கரையும் சமவிடை கூட்டி முன்போல உபயோகிக்க முன் குணமுண்டாம்.

75. திரிபலா ரஸாயனம்—திரிபலையும் இந்துப்பும் சமவிடை சேர்த்து முன்போல உபயோகிக்க முன் குணமுண்டாம்.

76. திரிபலா ரஸாயனம்—திரிபலையும் வசம்பும் சமவிடை எடுத்து முன்போல உபயோகிக்க முன் குணமுண்டாம்.

77. திரிபலா ரஸாயனம்—ஸுவர்ணம், இரும்பு, வெள்ளி, தாமிரம், கருவங்கம், வெள்வங்கம், இவைகளில் தனித்தனியாக

ஒரு லோஹத்துடன் திரிபலை சூர்ணம் சேர்த்து முன்போல உப யோகிக்க முன் குணமுண்டாம். குறிப்பு—70, 71, 72, 73, 74, 75, 76, 77, இந்த எட்டு ரஸாயனங்களும் சரகம், அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம் ஆகிய இந்நூல்களில் காணப் படுகின்றன.

78. விடங்கதண்டுல ரஸாயனம்—இது அஷ்டாங்க ஸங் கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. வாய்விளங்கத்தை யிடித்துப் புடைத்து உமி நீக்கி உள்ளிருக்குமரிசி தோலா 256, திப்பிலி தோலா 256, ஜீனி தோலா 384, தேன், நெய், நல்லெண்ணை, வகைக்குச் சின்னப்படி 4, இவைகளை ஒன்று சேர்த்து ஓர் பானையில் வைத்து மூடியிட்டு மழைகாலத்தில் சாம்பலில் புதைத்து வைத்து எடுத்து ஜீர்ணசக்தியை யனுசரித்து உபயோகிக்க முன் குண முண்டாம்.

79. விடங்கதண்டுல ரஸாயனம்—இது சகருதத்தில் மாத் திரம் காணப்படுகின்றது. முன்போல வாய்விளங்க அரிசி எடுத்து அதிமதுரம் சேர்த்து ஜீர்ணசக்தியை அனுசரித்து குளிர்ந்த நீர் அனுபானத்துடன் சாப்பிடவும். இவ்விதம் பிரதிதினம் செய்து ஒரு மாதம் முடிய உபயோகிக்க வேண்டும். வாய்விளங்கவரிசியை தேன் சேர்த்து சேங்கொட்டை கஷாயத்தில் உபயோகிக்கலாம். அல் லது தேன் சேர்த்து திராக்ஷைப்பழ கஷாயத்தில் உபயோகிக்கலாம். அல்லது தேன் சேர்த்து நெல்லிக்காய் ரஸத்துடன் உபயோகிக்க லாம். அல்லது தேன் சேர்த்து சிந்திற்கொடி கஷாயத்தில் உப யோகிக்கலாம். இவ்விதம் மொத்தம் ஆறு முறைகளாக உபயோகிக் கலாம். மருந்து ஜீர்ணமான பிறகு பாசிப்பயறு, நெல்லிவற்றல், இவை களால் தயாரிக்கப்பட்ட கஞ்சியுடன் உப்பில்லாமல் அல்ப நெய்யுடன் அரிசி சாதம் சாப்பிடலாம். இவை மூலநோய்களை விலக்கும். கிருமிகளைப் போக்கும். மூளைக்கு பலத்தை யளிக்கும்.

80. விடங்கதண்டுல ரஸாயனம்—முன்போல வாய்விளங்க அரிசி தயாரித்து சின்னப்படி 16 எடுத்து அதை மாவு பண்டங்களை வேகவைப்பது போல வேடுகட்டி ஆவியில் வேகவைத்து எடுத்து

அரைத்து ஓர் இரும்பு குடத்தில் போட்டு அது முழுகும்படி தேன் கலந்த நீர் விட்டு மழை காலத்தில் வீட்டிற்குள் சாம்பலில் புதைத்து நான்குமாதம் கழித்து எடுத்து பஞ்சகர்மாக்கள் செய்து கொண்டு பிரதிதினம் காலையில் ஜீர்ணசக்தியை யனுசரித்து உபயோகிக்கவும். மருந்து ஜீர்ணமான பிறகு பாசிப்பயறு, நெல்லிக்காய், இவைகளால் தயாரித்த கஞ்சியுடன் உப்பில்லாத அரிசி சாதத்தை சுவல்ப நெய்யுடன் உபயோகிக்கவும். மிருதுவான மண் படுக்கையில் படுக்க வேண்டும். ஒரு மாதமான பிறகு அவனுடைய ஸகல அவயவங்களிலிருந்தும் கிருமிகள் வெளிப்படும். அணுதைலம் தடவி மிருதுவான மூங்கில் இடுக்கியால் அவைகளை நீக்கவேண்டும். இரண்டாவது மாதத்தில் சில கிருமிகளும் மூன்றாவது மாதத்தில் சில கிருமிகளும் வெளிவரும். அவைகளையும் முன்போலவே விலக்கவேண்டும். நான்காவது மாதத்தில் பற்கள், நகங்கள், ரோமங்கள், இவை கழன்று போகும். ஐந்தாவது மாதத்தில் நல்ல குணங்கள் உண்டாகும் நல்ல ரூபத்துடன் கூடிய சரீரம் உண்டாகும். நல்ல பலமும் சரீரதிடனும் உண்டாகும். அவனுக்கு ஸ்நாநத்திற்கு அணுதைலம் உபயோகிக்கவேண்டும். அஜகர்ண கஷாயத்தைத் தேய்க்கும் பொடியாகவும் விலாமிச்சவேர் சேர்ந்த குளிர்ந்த நீர் ஸ்நாநத்திற்கும் உபயோகிக்கவேண்டும். ஆகார நியமங்கள் இனி சொல்லப்படும் சேங்கொட்டை நெய்யில் போல கொள்ளவேண்டும்.

81. **காச்மர்ய ரஸாயனம்**—குமிழம் பழங்களை இடித்து பருப்பு எடுத்து அவைகளையும் 80வது ரஸாயன முறைப்படி பக்வம் செய்து அவ்விதமே உபயோகிக்கவும். இதில் மண் படுக்கை அவசியமில்லை. ஆகாரத்தில் முன்போல் நிர்பந்தமில்லை. இதில் காய்ச்சின பாலும் சாதமும் சாப்பிடலாம். குணங்கள் முன்போலவே. ரக்த பித்த நோய்களில் இம்முறை முக்கியமானது. இம்முறை சுச்ருதத்தில் காணப்படுகின்றது.

சித்தர் முறை.

(பண்டிட் நாராயணய்யங்கார் எழுதியது)

ஐந்து கண்டங்களாக வகுக்கப்பட்ட சித்தர் நூல்களில் வாத கண்டம், மந்திரகண்டம் ஆகிய இவ்விருகண்டங்கள் நீங்கலாக மற்ற மூன்று கண்டங்களும் வைத்தியர்களுக்கு மாத்திரம் உபயோக முள்ளவைகளாக விருக்கின்றன. இம்மூன்று கண்டங்களும் சேர்ந்து ஒரே புஸ்தகமாகக் காணப்படுகின்றது. இப்புஸ்தகங்களுக்கு **ரஸகிரந்தங்கள்** எனப் பொதுவாக வடமொழி வைத்யர்கள் பெயரிட்டு அழைக்கின்றனர். தமிழ் வைத்யர்கள் **சித்தர் நூல்** எனப் பொதுவில் கூறுகின்றனர். ரஸகிரந்தம் என்ற பதம் ரஸங்களைச் சொல்லும் நூல் என்ற பொருளைக் கொடுக்கும். ரஸம் என்ற சொல் தமிழில் Mercury என்ற பாதரஸத்தை குறிப்பதாகும். ஆனால் வடமொழியில் உலோஹங்கள் நீங்கலாக மற்றவைகளையும் குறிக்கும். ஆதலால் ரஸகிரந்தமென்றால் ரஸம் முதலிய பல பொருள்களை விவரிக்கும் கிரந்தமெனப் பொருளாகும். வடமொழி ரஸகிரந்தங்களில் **ரஸம், மஹாரஸம், உபரஸங்கள், சாதாரண ரஸங்கள், உலோஹங்கள், ரத்னங்கள்,** என வஸ்துக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன சில நூல்களில் ரஸமென்றும் உபரஸங்களென்றும், உலோஹங்களென்றும், ரத்னங்களென்றும் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ரஸமென்பது பாதரஸம் ஒன்றே. மஹாரஸங்கள் எட்டு. அவை யாவன—அப்பிரகம், வைக்ராந்தம், மாக்ஷிகம், விமலா, சிலாஜது, துத்தம், சபலம், ரஸகம், ஆக எட்டு. உபரஸங்கள் எட்டு. அவையாவன—கந்தகம், கைரிகம், அன்னபேதி, படிகாரம் (இதைசீனிக்காரமென்பர்) தாளகம், மனோசிலை, அஞ்சனக்கல், கங்குஷ்டம், ஆக எட்டு. ஸாதாரண ரஸங்கள் ஒன்பது அவையாவன—கம்பில்லம், பாஷாணம், நவாச்சாரம், சோகி, (இதுவே பலகரை) அக்னிஜாரம், கிரிசிந்தூரம், லிங்கம், மிருதார்சிங்கி, ராஜாவர்த்தம், ஆகஒன்பது. சில நூல்களில் வெங்காரம், ஸ்படிகம், சங்கு, பலப்பக்கல் மணல், போளம், கோபிச் சந்தனம், கடல்நுரை, சிறுசங்கு, முத்துச்சிப்பி, சிந்தூரம், (இது ஈயசிந்தூரம் என்ற கடைச்சரக்கு) ஆக இந்த 11 சரக்குகளையும்

உபரஸங்களென சொல்லப்பட்டிருக்கின்றது. சிலர் மஹாரஸம் 8, சாதாரணரஸம் 8, உபரஸம் 8, வெங்காரம் முதலிய 11 இவையனைத்தையும் அதாவது 35 சரக்குகளையும் உபரஸங்களென அழைக்கின்றனர். (இதை யொட்டியே ரஸகிரந்த மென்ற பெயர் இந்நூல்களுக்கு இடப்பட்டது.) உலோஹங்கள் ஒன்பது. அவையாவன—சுவர்ணம், வெள்ளி, தாமிரம், இரும்பு, (இவை நான்கும் சுத்த லோஹங்களென அழைக்கப்படுகின்றன) வெள்ளீயம், கருவங்கம், (இவையிரண்டும் பூதிலோஹமென அழைக்கப்படுகின்றன.) பித்தளை வெங்கலம், வர்தம் (இம்மூன்றும் மிச்ரலோஹமென அழைக்கப்படுகின்றன.) இரத்னங்கள் பத்து. அவையாவன—ஸூர்யகாந்தக்கல், சந்திரகாந்தக்கல், வஜ்ரம், முத்து, புஷ்பராகம், நீலம் (இது இந்திர நீலம்) பத்மராகம், (இது மாணிக்யமெனப்படும்) பவழம், வைதூர்யம், பச்சை, (இதுவே மரகதப்பச்சை) ஆக பத்து. இவற்றுள் புஷ்பராகம் இந்திரநீலம், பத்மராகம், வஜ்ரம், மரகதம் ஆக இந்த ஐந்தும் மஹாரத்னங்களெனப்படும்.

ரஸம்—இதை ஆங்கிலத்தில் Mercury என அழைப்பர். இதைத் தமிழில் ரஸம் என்றும் பாதரஸம் என்றும் சாதாரணமாக வழங்குவார்கள். சுதேச நூல்களனைத்தும் இதைப் பெருமையாகக் கொண்டாடுகின்றன. ஆங்கில வைத்யத்திலும் இது புகழப்படுகின்றது. இதைப் பல விதமாக ஆங்கில வைத்தியத்தில் உபயோகிக்கின்றனர். மகோதரம், வீக்கம் முதலிய ரோகங்களில் மூத்திரம் அதிகரிக்கும்படி மூத்திரக்குண்டிக் காய்களைத் தூண்டுவதில் நிகரற்றதென ஆங்கில வைத்தியத்தில் கொண்டாடப்படும் மருந்து இந்த ரஸத்தைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றது. இதை அக்னிக்கு ஜயிக்கும்படி செய்து விட்டால் உயர்ந்த காயகல்பமாகவும் இது ஆகின்றது. இது கந்தகத்துடன் சேர்ந்து பல முறைகளில் காணப்படுகின்றது. இது தற்காலம் பிறதேசங்களிலிருந்து நமது நாட்டிற்குக்கொண்டு வரப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் கனிகளிலிருந்து நமது நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக நூல்களால் அறியலாகும். கடையில் கிடைக்கும் ரஸத்தில் பல தோஷங்களிருப்பதால் அவை நிவர்த்தியாவதற்கு அவசியம் சுத்தி செய்யவேண்டும். லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்துக் கொள்ளுவதால் சுத்தி வேண்டு

இலகுவாக ஆகலாம். ஆனால் ரஸசுத்தி என்பது ரஸத்தில் தோஷங்களை விலக்குவது மாத்திரமின்றி ரஸத்தில் குணத்தையும் உண்டு பண்ணுவதாக விருப்பதால் இந்த சுத்திகளை கூடியவரை செய்து முடிப்பதே உசிதமாகின்றது. ஆகவே ரஸசுத்திகளை ரஸஸம்ஸ்காரங்களென நூல்கள் கூறுகின்றன. ஸம்ஸ்காரமாவது வஸ்துவுக்குப் புதிய சக்தியை யளிப்பதே. "த்வதசைதே ரஸே தோஷா" என்று ரஸத்தில் 12 தோஷங்கள் இருக்கின்றன. அவைகளுள் மூன்று தோஷங்கள் பிரதானமானவை. அவைகளாவன— விஷம், அக்னி, மலம், ஆகியவைகளே. இவை நிஸர்க தோஷங்கள் எனப்படுகின்றன. நிஸர்கதோஷங்கள் என்றால் இயற்கை தோஷங்களெனப் பொருள். மற்ற தோஷங்கள் செயற்கையில் வந்தன. இவ்விதம் இயற்கையிலும் செயற்கையிலும் ரஸத்திற்கு ஏற்பட்டுள்ள தோஷங்கள் 12-யும் விலக்க ஸம்ஸ்காரங்கள் அல்லது சுத்திகள் செய்ய வேண்டியது அவசியமாகின்றது. ஸம்ஸ்காரங்கள் 18 விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—ஸ்வேதனம், மர்தனம், மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம், ரோதனம், நியாமனம், தீபனம், அப்பிரகக்ராஸமானம், சாரணம், கர்பத்ருதி, பாஹ்யத்ருதி, ஜாரணம், க்ராஸம், ஸாரணம், க்ராமணம், வேதம், யோகம், ஆக இவ்விதம் 18. சிலர் இவைகளுடன் அநுவாஸனம் என்பதையும் சேர்த்து 19 ஸம்ஸ்காரங்கள் என்கின்றனர். இவற்றுள் ஐந்தாவதான ரோதனம் என்ற ஸம்ஸ்காரத்தைச் சிலர் போதனமென அழைப்பர். ரோதனம், போதனம், என்ற இரண்டு சொற்களும் ஒரு அர்த்தத்தையே குறிப்பிடுகின்றன. ரோதனம் என்ற சொல் வெகு நூல்களில் காணப்படுகின்றது. போதனம் என்ற சொல் இரண்டொரு நூல்களில் காணப்படுகின்றது. இவற்றுள் ஸ்வேதனம், மர்தனம், மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம், ரோதனம், நியாமனம், தீபனம், ஆக எட்டு ஸம்ஸ்காரங்களும் முக்கியமானவை. இந்த அஷ்ட ஸம்ஸ்காரமே வைத்தியத்திற்குத் தேவையானது. மற்ற ஸம்ஸ்காரங்கள் வாதத்திற்கும் (ரஸவாதம் அதாவது தங்கம் செய்யும் வித்தை) காயகல்பத்திற்கும் தேவையானவை. இந்த ஸம்ஸ்காரங்களை ஏற்கனவே சொல்லியுள்ள வரிசையில் செய்யவேண்டும்.

1. **ஸ்வேதனம்**—இது ரஸத்தின் முதல் ஸம்ஸ்காரமாகும். பல

வித தானியங்களை கிடைத்த வளவு எடுத்து உமி நீக்கிப்புடைத்து ஓர் மண்பாண்டத்திலிட்டு அது நிறைய சுத்த ஜலம் விட்டு நன்றாக புளிப்பு எறும் வரையில் வைத்திருந்து பிறகு அந்த நீரைத் தெளிவாக எடுத்து ஓர் மண் சட்டியில் பாதி சட்டி விட்டு அதில் கோரைக் கிழங்கு, பிரமி, வெள்ளைப்பூ விஷ்ணுக்கிராந்தி, சாரணத்தி, பொன்னாங்காணி, கீரிபுரண்டான், ஸஹாதேவி, (இதுவே சிராசெங் கழுநீர்,) தண்ணீர்விட்டான். திரிபலை, நீலபுஷ்பமுள்ள விஷ்ணு கிராந்தி, சிறுபுள்ளடி, கொடுவேலி, ஆக இந்த 14 சரக்குகளில் கிடைத்த மட்டில் அதாவது எட்டு சரக்குகளுக்குக் குறையாமல் சமயிடையாக எடுத்து (ஒவ்வொரு சரக்கும் ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்காக எடுத்துக் கொள்ளவும்) நன்றாக அரைத்துப் போட்டு (இதற்கு தான் யாம்லமெனப் பெயர்) ரஸத்தை ஓர் துணியில் பொட்டளமாகக் கட்டி அதில் தொங்க விட்டு (தோலா யந்திரத்தில்) சிறு தீயிட்டு மூன்று நாள் விடாமல் எரிக்கவேண்டும். தோலா யந்திரமாவது—ஓர் பாண்டத்தில் ஏற்கனவே சொல்லியுள்ள திரவபதார்த்தத்தைப் பாதி பாண்டம் விட்டு பாண்டத்தின் கழுத்து பாகத்தில் இரு பக்கத்திலும் ஓட்டை செய்து அதில் ஓர் குச்சியைநுழைத்து ரஸம் முதலிய வஸ்துக்களைத் துணியில் கட்டி அந்தக்குச்சியின் நடுவில் முடிந்து பாண்டத்தின் அடி பாகம் படாமலிருக்கும்படி சுமார் 3, 4, அங்குலம் உயரத்திற்கு மேலேயே இருக்கும்படி தொங்கவிட வேண்டும். மூன்று நாள் எரிக்கும் போது ஜலம் ரஸப்பொட்டளத்தில் படாமல் குறைந்து விட்டால் ஏற்கனவே சொல்லியுள்ள திரவத்தை மறுபடியும் பாதியளவுக்கு முன்போல விட்டுக் கொள்ளவேண்டும். தீபாக்னியாக எரிக்க வேண்டும்.

வேறு விதம் ஸ்வேதனம்—இது மற்றொரு விதமான ஸ்வேதனம். திரிகடு, இந்துப்பு, கடுகு, உள்ளிப்பூண்டு, திரிபலை, இஞ்சி, மஞ்சள்பூ குருந்தொட்டி, நாகபலா, சிறுக்கீரை, சாரணத்தி, மேஷசிருங்கி (இது ஓர் மரம். இது கிடைக்காவிட்டால் கர்காடக சிருங்கியை எடுத்துக் கொள்ளவும்) கொடுவேலி, நவாச்சாரம், ஆகிய இவைகளை வகைக்கு ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்குஎடுத்து முன்சொன்ன தான் யாம்லத்தால் அரைத்து அந்த கல்கத்தால்

ஓர் வெள்ளைத் துணியில் கட்டை விரல் பிரமாணம் தடவி அதன் நடுவில் ரசத்தை வைத்துப்பொட்டளமாகக் கட்டி முன்சொன்னபடி சட்டியில் பாதிவரை தான்யாம்லம் விட்டு தோலா யந்திரமாக ரஸப்பொட்டளத்தைக் கட்டி மூன்று நாள் தீயிட்டு எரிக்கவும்.

மற்றொரு வித ஸ்வேதனம்—திரிகடு, இந்துப்பு, கடுகு, கொடுவேலி, இஞ்சி, முள்ளங்கி, இவைகளை ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு வகைக்குச் சமயிடையாக எடுத்து அரைத்து அந்த கல்கத்தால் ஓர் வெள்ளைத் துணியில் கட்டை விரல் பிரமாணம் தடவி அதில் ரஸத்தை வைத்து முன்போல தோலா யந்திரமாக மூன்று நாள் தீபாக்னியாக எரிக்கவும். ஒவ்வொரு நாளும் ரஸத்தை எடுத்து புதிய கல்கம் தயாரித்து முன்போல துணியில் தடவி ரஸத்தை அதில் வைத்து எரிக்க வேண்டும். இது ஓர் சித்தமுறைப் படி செய்யும் ஸ்வேதனம்.

மற்றொரு ஸ்வேதனம்—துணியை நான்கு மடியாக மடித்து அதன்பேரில் திரிகடு, திரிபலை, கொடுவேலி, சோற்றுக்கற்றாழை, ஆகிய இவைகளை வகைக்கு ரஸத்தின் 16-ல் ஒரு பங்கு சமயிடையாக எடுத்து அரைத்து முன்போல கட்டை விரல் பிரமாணம் பூசி ரஸத்தை அதில் வைத்து முன்போல தான் யாம்லம் விட்ட மண் பாண்டத்தில் தோலா யந்திரத்தில் ஒரு நாள் எரிக்கவும். குறிப்பு—இவ்விதம் மூன்று நாள் எரிக்கமுடியாத பக்ஷத்தில் ஒரு நாளாவது பூர்ணமாக எரிக்கவேண்டும். இந்த நான்கு ஸ்வேதனங்களில் ஏதாவது ஓர் வகை ஸ்வேதனத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் ஸ்வேதனம் செய்வதால் ரஸத்திலுள்ள தோஷங்கள் இளகி விடுகின்றன. இனி மேலே சொல்லப்போகும் ஸம்ஸ்காரங்களால் அந்த இளகின தோஷங்கள் நிவர்த்தியாகி விடுகின்றன.

2. மர்தனம்—ரஸத்தை கல்வத்திலிட்டு சூர்ணங்களாலும் திரவங்களாலும் அரைப்பது மர்தனமெனப்படும். ஏற்கனவே ஸ்வேதனம் செய்த ரஸத்தை கல்வத்திலிட்டு புகைக்கூடு, (இதை நிட்டடை என்று ஜனங்கள் அழைப்பார்கள்) செங்கல்பொடி, தயிர், வெல்லம், இந்துப்பு, கடுகு, இவைகளை ச்சமயிடையாக எடுத்து

தயிர், வெல்லம், இவை நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திர காயம் செய்து மொத்தம் ஆறு சாக்குகளும் சேர்ந்து ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்காக எடுத்துச் சேர்த்து மூன்று நாள் கைவிடாமல் அரைக்க வேண்டும். அல்லது ஒரு நாளாவது அரைக்க வேண்டும்.

மற்றொரு முறை மர்தனம்—செங்கல்பொடி, மஞ்சள், ஓட்டடை, ஆட்டுரோம பஸ்மம், இவைகளைச் சமமெடுத்து முன் போல பொடிசெய்து ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு எடுத்து கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம் விட்டு மூன்று நாள் அல்லது ஒரு நாள் அரைக்கவும். பிறகு ரஸத்தைத் தனிப்படுத்த வேண்டும். மேல் சட்டியில் பதங்கிக்கும் படி செய்து ரஸத்தைத் தனிப்படுத்தலாம். கஞ்சியில் அலசி தனிப் படுத்தலாம். குறிப்பு—இந்த இருவகை மர்தனங்களுக்குள் ஏதாவது ஒரு வகைப்படி மர்தனம் செய்து ரஸத்தைத் தனிப்படுத்திப் பிறகு அடியிற் காணுமாறு மூர்ச்சனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும்.

3. மூர்ச்சனம்—மூர்ச்சனமென்பது அடியிற்காணும் சில மூலிகைகளைப் பொடி செய்து கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து அரைப்பதுவே. ரஸத்தில் இயற்கையில் அமைந்துள்ள தோஷங்கள் ஐந்தில் மூன்று தோஷங்கள் முக்கியமானவை யென முன்பே சொன்னோம். அவையாவன—மலம், அக்னி, விஷம், ஆகியவைகளே. இம்மூன்று தோஷங்களால் மிகுந்த விபத்துகள் உண்டாவதால் இவைகளை விலக்க இந்த மூர்ச்சனமென்ற ஸம்ஸ்காரம் சொல்லப்பட்டிருக்கின்றது. குமரி, (சோற்றுக்கற்றாழை) மலம் என்ற தோஷத்தை விலக்குகின்றது. திரிபலை அக்னி என்றதோஷத்தை நிவர்த்திக்கின்றது. கொடுவேலி விஷம் என்ற தோஷத்தைப் போக்குகின்றது, ஆகவே இந்த ஐந்து சாக்குகளையும் தனித்தனி சமமாக எடுத்து ரஸத்தின் அளவுக்கு 16-ல் ஒரு பங்கு மொத்தத்தில் இருக்கும்படி செய்து கல்வத்திலிட்டு ரசத்தையும் சேர்த்து அரைக்கவேண்டும். சோற்றுக்கற்றாழை நீங்கலாக மற்ற நான்கு சாக்குகளையும் நன்றாகப் பொடிசெய்து கொண்டு பிறகு அவை

வற்றையும் ஒன்று சேர்த்து அரைக்கவேண்டும். பிறகு ரஸத்தைத் தனிப்படுத்தி முன் போல அரைக்கவேண்டும். இவ்விதம் ஏழு தடவை செய்யவேண்டும். ஏழு தடவை செய்ய வேண்டுமென்று நூல்களில் கூறப்பட்ட போதிலும் இம்முறை ரஸவாதத்திற்காகச் சொல்லப்பட்டதென்றும் வைத்திய விஷயத்தில் ஒரு முறை செய்யும் மூர்ச்சனமே போதுமானதென்றும் நூல்கள் கூறுகின்றன. மூன்று மணி நேரம் அரைக்க வேண்டும்.

மற்றொரு மூர்ச்சனம்—சரக்கொன்னை மரத்தின்வேர், குமரிச்சார், இவைகளால் ரஸத்தை அரைப்பது ஓர் வித மூர்ச்சனமாகும். கருஊமத்தை ரஸத்தால் அரைக்க சாஞ்சல்யம் என்ற தோஷம் விலகும். திரிபலை, குமரி இவைகளின் கஷாயத்தால் அரைக்க விஷம் என்ற தோஷம் விலகும். திரிகடு, குமரி, இவைகளின் ரஸத்தால் அரைக்க கிரி என்ற தோஷம் விலகும். கொடுவேலி, குமரி, இவைகளால் அரைக்க அக்னி என்ற தோஷம் விலகும். ஒவ்வொரு தடவையும் அரைத்து சுடும் கஞ்சியில் அலசி ரஸத்தை எடுக்கவும். இம்முறைகளால் ரஸத்தின் ஏழு கஞ்சுகங்கள் அல்லது தோஷங்கள் நிவர்த்தியாகும்.

மற்றொரு முறை—குமரி, கொடுவேலி, சிகப்பு கடுகு, கண்டங்கத்திரி, இவைகளைக் கஷாயம் செய்து அரைத்தாலும் அல்லது திரிபலை கஷாயத்தால் ஏழு நாள் அரைத்தாலும் ரஸத்தின் ஏழு கஞ்சுகங்கள் அல்லது தோஷங்கள் நிவர்த்தியாகும். குறிப்பு—சாதாரணமாக வைத்யர்கள் ரஸத்தைச்சுத்தி செய்யும் முறையாவது—கொடுவேலிவேர், திரிபலை, குமரிச்சார், இவைகளைச் சமமாக எடுத்து ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு கிரஹித்து கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து ஒரு யாமம் அரைத்து சுடு நீரில் அலசி ரஸத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. உத்தாபனம்—மூர்ச்சனம் செய்த ரஸத்தைத் தனிப்படுத்தவும். தனிப்படுத்த முடியாவிட்டால் அந்த சூர்ணங்களை அப்படியே ஓர் மண் சட்டியில் போட்டு வாயில் இரு சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்குச்சீலை மண் செய்து அடுப்பேற்றி இரண்டு யாமம் மந்தாக்னி

யாக எரிக்க ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும். ஆறின பிறகு ரஸத்தை எடுத்துக்கொள்ளவும். இதற்கு உத்தாபனம் எனப்பெயர். உத்தாபனம் என்றால் ரஸத்தைத் தனிப்படுத்தல் எனப்பொருள்.

5. பாதனம்-ரஸத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்து மேலும் கீழும் குறுக்காகவும் போகும்படி செய்யும் ஸம்ஸ்காரத்திற்குப் பாதனம் எனப் பெயர். ஆகவே பாதனம் ஊர்த்வபாதனம் அத: பாதனம், திர்யக் பாதனம், என மூன்று விதமாகும். உத்தாபனம் செய்த ரஸம் மூன்று பங்கும் தாமிரப்பொடி ஒரு பங்குமாக எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரஸம் விட்டு ஓரே மொத்தையாக ஆகும்படி அரைக்கவேண்டும். அந்த மொத்தையை அப்படியே ஓர் மண் சட்டியிலிட்டு மேல் மண் சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்கு சீலை மண் செய்து மேல் சட்டியின் வெளிப்பக்கம் நுனியில் ஓர் பாத்தி கட்டி அதில் ஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கு யாமம் அதாவது 12 மணி எரிக்கவும். ஆறின பிறகு மேல் சட்டியில் இருக்கும் பதங்கத்தை எடுத்துக்கொள்ளவும். இதற்கு ஊர்த்வ பாதனம் எனப்பெயர்.

மற்றொரு முறை—மயில் துத்தம், சுவர்ணமாக்ஷிகம், இவைகளை ரஸத்துடன் சேர்த்துக்குமரிச்சாற்றால் அரைத்து முன்போல எரித்து எடுக்கவும். இது மற்றொரு முறை ஊர்த்வபாதனம்.

அத: பாதனம்—அதாவது ரஸத்தைக் கீழ் நோக்கிச்செல்லும்படி செய்தலாம். திரிபலை, முருங்கை, கொடிவேலி, இந்துப்பு கடுகு, இவைகளைப் பொடிசெய்து ரஸத்தைச் சேர்த்து குமரிச்சாற்றால் அரைத்து ஓர் சட்டியின் உள் பாகத்தில் தடவி ஓர் சட்டி நிறைய தண்ணீர் விட்டு அந்தச் சட்டியின் பேரில் முன் சொன்ன சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்குச் சீலை மண் செய்து இந்த இரண்டு சட்டிகளில் மருந்துள்ள சட்டியில் பாதி சட்டி முழுகும்படி குழி செய்து அதில் அதை வைத்து குழியை மூடி மேல் சட்டியின் மேல் எருமுட்டை யடுக்கித் தீயிட ரஸம் கீழ்ச் சட்டியிலுள்ள தண்ணீரில் இறங்கும். [illegible] எடுத்துக்கொள்ளவும். இதற்கு அத: பாதனம் எனப்பெயர் [illegible] தீயிடவும்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)

S.F. 259A-6—1,00,000—30-1-84.